26

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8069805

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : திருச்சி | PS: ஊ.த.க பிரிவு | Year: 2020 | FIR No.: 05 | Date: 14/09/2020
மாவட்டம் | காவல்நிலையம் | ஆண்டு | மு.த.அ. எண் | நாள்

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச்சட்டம் 1988 | Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(e)
(ii) Act சட்டம்: இந்திய தண்டனைச்சட்டம் | Sections பிரிவுகள்: 109
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 2012 | Date to : நாள் வரை 2018
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14/09/2020 | Time : நேரம் 1400 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கிடைக்கப்பெற்ற ரகசிய தகவல்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் திருச்சி, மதுரை, சிவகங்கை, திருநெல்வேலி மாவட்டங்கள்
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : | District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : ப. அருள்ஜோதி | (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் | தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர் | (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு. கருணாநிதி தப ராமலிங்கம், முன்னாள் இணை ஆணையர் (செயலாக்கம் வணிகவரி) அலுவலகம், திருச்சி
2. திருமதி. தமிழ்மணி க/பெ. கருணாநிதி, வீட்டு எண் 3, சர்வேஸ்வரா ஆர்ம்ஸ் பள்ளி தெரு, பாலகணேஷ், மதுரை-3

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

தமிழ்நாடு விழிப்புப் பணி ஆணைய கடித எண். V.C.'s lr.No.1585/VC-I/2020-1, dated 10.07.2020-ன்படியும், சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக PE85/2018/CT/TR, dated 12.08.2018-ன்படியும், எதிரி திரு.கருணாநிதி, முன்னாள் இணை ஆணையர், (செயலாக்கம்), வணிகவரித்துறை அலுவலகம், திருச்சி என்பவர் 01.04.2012 முதல் 30.04.2018 வரையிலான குறியீட்டு காலத்தில் அவரது பெயரிலும், அவரது மனைவி திருமதி.தமிழ்ராணி பெயரிலும் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் பெயரிலும் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளார் என்பது தெரியவந்ததின் அடிப்படையில் திரு.கருணாநிதி, முன்னாள் இணை ஆணையர், (செயலாக்கம்), மற்றும் திருமதி.க.தமிழ்ராணி, க/பெ.கருணாநிதி வீட்டு எண்.3, சால்வேஷன் ஆர்மி ஸ்கூல் தெரு, திருவள்ளுவர் நகர், பழங்காணத்தம், மதுரை-3 ஆகியோர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த விபரம் பின்வருமாறு.

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed M. Navaneetha Krishnan Rank Inspr. of Police, V&AC, Trichy. to take up the Investigation / Refused Investigation / transferred to PS.......... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................. பதவி .................. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.

மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ப. அருள்ஜோதி,
Rank: நிலை காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு பிரிவு, திருச்சி.

<u>திருச்சி ஊ.த.க. பிரிவு குற்ற எண். 05/2020-ன் முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி.......</u>

எதிரி திரு.கருணாநிதி, முன்னாள் இணை ஆணையர், (செயலாக்கம்), வணிகவரித்துறை அலுவலகம், திருச்சி, என்பவர் சிவகங்கை மாவட்டத்தில் கடந்த 25.04.2012 முதல் 17.12.2012 வரை உதவி ஆணையராகவும், மதுரை மாவட்டத்தில் 17.12.2012 முதல் 05.07.2013 வரை துணை ஆணையராகவும், திருநெல்வேலி மாவட்டத்தில் 10.07.2013 முதல் 20.08.2014 வரையும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 22.08.2014 முதல் 30.04.2018 வரையும் இணை ஆணையராக பணியாற்றியுள்ளார். மேற்படி எதிரி ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 2(c)-ன் படி பொது ஊழியர் ஆவார்.

இவர் 18.04.1990 அன்று தூத்துக்குடி, வணிகவரி அலுவலராக பணியில் சேர்ந்துள்ளார். இவரது சொந்த ஊர் சிவகங்கை மாவட்டம் ஆகும். இவருக்கும் மதுரை மாவட்டம், திரு.அழகு என்பவரின் மகள் தமிழ்ராணி என்பவருக்கும் திருமணம் நடைபெற்றுள்ளது. இவருக்கு ஒரு மகள் மற்றும் ஒரு மகன் உள்ளனர். இவரது மகன் க.ஜோஷி வெங்கடேஷ் என்பவர் பாண்டிச்சேரி ஸ்ரீமணக்குல விநாயகர் மருத்துவ கல்லூரியில் டாக்டர் பட்டம் படித்துள்ளார். இவரது மகள் செல்வி.ராகவி மதுரை வேலம்மாள் மருத்துவ கல்லூரியில் டாக்டர் படிப்பு பயின்று வருகிறார். இவரது மனைவி திருமதி.தமிழராணி என்பவர் குடும்பத் தலைவியாக மட்டும் உள்ளார். எதிரி திரு.கருணாநிதிக்கு அவரது மாதாந்திர சம்பளத்தைத் தவிர வேறு எந்தவித வருமானமும் கிடையாது. எதிரி திரு.கருணாநிதி மற்றும் அவரது மனைவி திருமதி.தமிழ்ராணியின் உடன் பிறந்தவர்கள் எவரும், இவர்களைச் சார்ந்தோ, அவர்களைச் சார்ந்து இவர்களோ வாழவில்லை.

எதிரி திரு.கருணாநிதி அவருடைய மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்கள் பெயரிலும் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் வாங்கியுள்ளதாக சேகரித்த தகவலின் அடிப்படையில் எதிரி திரு.கருணாநிதி 01.04.2012 முதல் 30.04.2018 வரையிலான குறியீட்டு காலத்தில் வருமானத்திற்கு அதிகமாக சட்ட விரோதமாக அபரிமிதமான சொத்து சேர்த்துள்ளார் என்பது புலனாகிறது. அதன்படி

(1) 01.04.2012 Check period-க்கு முன்பாக எதிரி திரு.கருணாநித பெயரிலும், அவருடைய மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்கள் பெயரிலும் உள்ள அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் மதிப்பு ரூ. **6.40.989**/- ஆகும்.

(2) 01.04.2012 ஆம் ஆண்டிலிருந்து 30.04.2018 ஆம் ஆண்டு வரையான Check period-ல் எதிரி திரு.கருணாநிதி பெயரிலும், அவருடைய மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்கள் பெயரிகளிலும் சேர்த்துள்ள அசையும் சொத்துக்களாக தங்க நகைகள், வெள்ளிப் பொருட்கள், வைப்பு தொகைகள், சேமிப்பு கணக்குகளில் வைத்துள்ள தொகைகள், வாகனங்கள் போன்றவைகளின் மதிப்பு ரூ. 76,48,043/- ஆகும்.

(3) எதிரி திரு.கருணாநிதி 01.04.2012 முதல் 30.04.2018 வரையிலான Check period-ல் அவருக்கு கிடைக்கப் பெற்ற மாதாந்திர சம்பளம், அவரது விவசாய வருமானத்திலிருந்து கிடைக்கப் பெற்ற வருமானம் உட்பட ஆகியவைகளின் மதிப்பு ரூ.97,75,018/-- ஆகும்.

(4) எதிரி திரு.கருணாநிதி 01.04.2012 முதல் 30.04.2018 வரையிலான Check period-ல் அவருக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களின் நுகர்வோர் செலவு, கல்வி செலவினங்கள், ஆயுள் காப்பீட்டு கழகத்தில் செலுத்திய வருடாந்திர பிரீமியம் தொகை செலுத்திய செலவு ஆகியவைகளின் மொத்த செலவுகள் ரூ.**56,23,831**/- ஆகும்.

**அட்டவணை-I**

| | | |
|---|---|---|
| 1) | 01.04.2012 அன்று எதிரி திரு.கருணாநிதி பெயரிலும், அவரது குடும்ப உறுப்பினர்களின் பெயரிலும் உள்ள மொத்த சொத்து மதிப்பு | ரூ. **6.40.989/-** |

**அட்டவணை-II**

| | | |
|---|---|---|
| 2) | 30.04.2018 அன்று எதிரி தனது பெயரிலும், அவரது குடும்ப உறுப்பினர்களின் பெயரிலும் உள்ள மொத்த சொத்து மதிப்பு | ரூ. 76,48,043 |

**அட்டவணை-III**

| | | |
|---|---|---|
| 3) | 01.04.2012 முதல் 30.04.2018 வரையிலான காலத்தில் எதிரிக்கு கிடைத்துள்ள மொத்த வருமானங்கள் (தோராயமாக) | ரூ. 97,75,018 |

**அட்டவணை-IV**

| | | |
|---|---|---|
| 4) | 01.04.2012 முதல் 30.04.2018 வரையிலான காலத்தில் எதிரி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் செய்த மொத்த செலவுகள் (தோராயமாக) | ரூ. **56,23,831** |

**அட்டவணை-V**

| | | |
|---|---|---|
| 5) | 30.04.2018 அன்று எதிரியின் பெயரிலும், அவரது குடும்ப உறுப்பினரின் பெயரிலும் உள்ள மொத்த சொத்து மதிப்பு | ரூ. 76,48,043 |
| | 01.04.2012 அன்று எதிரியின் பெயரிலும், அவரது குடும்ப உறுப்பினரின் பெயரிலும் உள்ள மொத்த சொத்து மதிப்பு | ரூ. 6,40,989 |
| | மேற்படி Check period காலத்தில் எதிரி தன் பெயரிலும், அவரது குடும்ப உறுப்பினரின் பெயரிலும் சேர்த்துள்ள மொத்த சொத்துக்களின் தோராய மதிப்பு (II-I) | ரூ. 70,07,054 |

## அட்டவணை-VI

| | | |
|---|---|---|
| 6) | 01.04.2012 முதல் 30.04.2018 வரையிலான காலத்தில் எதிரிக்கு கிடைத்துள்ள மொத்த வருமானங்கள் (தோராயமாக) | ரூ. 97,75,018 |
| | 01.04.2012 முதல் 01.02.2018 வரையிலான காலத்தில் எதிரி செய்துள்ள மொத்த செலவுகள் (அட்டவணை-IV) | ரூ. 56,23,831 |
| | மேற்படி Check period காலத்தில் எதிரி சேர்த்துள்ளமொத்த சேமிப்பு (தோராயமாக) (III-IV) | ரூ. 41,51,187 |

## அட்டவணை-VII

| | | |
|---|---|---|
| 7) | 01.04.2012 முதல் 30.04.2018 வரையிலான காலத்தில் எதிரிசேர்த்துள்ள மொத்த சொத்துக்களின் மதிப்பு தோராயமாக | ரூ. 70,07,054 |
| | 01.04.2012 முதல் 30.04.2018 வரையிலான காலத்தில் எதிரி சேர்த்துள்ள மொத்த சேமிப்பு (தோராயமாக) | ரூ. 41,51,187 |
| | எதிரி தனது வருமானத்திற்கு அதிகமாக சேர்த்துள்ள மொத்த சொத்துக்களின் மதிப்பு (29.21%) (V-VI) | ரூ 28,55,867 |

**எதிரி திரு.கருணாநிதி அவரது வருமானத்திற்கு அதிகமாக சேர்த்துள்ள மொத்த சொத்தின் மதிப்பின் சதவீதம்.**

$$\frac{\text{(VII) } 28,55,867}{\text{(III) } 97,75,018} \times 100 = 29.21\%$$

எதிரி திரு.கருணாநிதி தன் பெயரிலும், தன் மனைவி திருமதி.தமிழராணி பெயரிலும், 01.04.2012 முதல் 30.04.2018 ஆம் ஆண்டு வரையிலான Check period காலத்தில் சட்டத்திற்கு புறம்பான வகையில், தனது வருமானத்திற்கு அதிகமாகவும் ரூ.28,55,867/-க்கு அசையும் மற்றும் அசையா சொத்துக்களை அபரிமிதமாக வாங்கி சேர்த்துள்ளார்.

பொது ஊழியரான எதிரி திரு.கருணாநிதி, முன்னாள் இணை ஆணையர், விரிவாக்கம், வணிகவரி அலுவலகம், திருச்சிராப்பள்ளி என்பவரின் மேற்படி குற்றமுறு கெட்ட நடத்தை செய்கையானது u/s 13(2) r/w 13(1)(e) of the Prevention of Corruption Act-1988 -ன்படி தண்டனைக்குரிய குற்றமாகும். எதிரியின் மனைவி திருமதி.தமிழ்ராணி தனது கணவர், மேற்படி சட்டத்திற்கு புறம்பான செயல்கள் மூலமாக சம்பாதித்த பணத்தை கொண்டு வருமானத்திற்கு அதிகமாக அபரிமிதமான சொத்து சேர்க்க தூண்டி, மேற்படி சட்ட விரோத சொத்துக்களை சேர்க்க உதவிபுரிந்து மேற்படி குற்றச் செயல்கள் புரிய உடந்தையாக இருந்து குற்றம் புரிந்துள்ளார். எனவே மேற்படி திருமதி.தமிழ்ராணி க/பெ.கருணாநிதி என்பவரின் செய்கையானது பிரிவு 109 IPC-ன்படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார்.

ஆகையால், எதிரி (1) திரு.கருணாநிதி, முன்னாள் இணை ஆணையர், செயலாக்கம், வணிகவரி அலுவலகம், திருச்சிராப்பள்ளி மற்றும் எதிரி (2) திருமதி.க.தமிழ்ராணி, க/பெ.கருணாநிதி வீட்டு எண்.3, சால்வேஷன் ஆர்மி ஸ்கூல் தெரு, திருவள்ளுவர் நகர், பழங்காணத்தம், மதுரை-3 என்பவர் மீது திருச்சி, ஊ.த.க. பிரிவு குற்ற எண். 05/2020, ச/பி 13(2) r/w 13(1)(e) of the Prevention of Corruption Act-1988 and 109 IPC யின்படி இன்று 14.09.2020 ஆம் தேதி 1400 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. (ஓம்.) ப.அருள்ஜோதி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, திருச்சி.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல் கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்களுக்கும், முதல் தகவல் அறிக்கையின் நகல் காவல் கண்காணிப்பாளர், தென்சரகம், ஊ.த.க. துறை, சென்னை அவர்களுக்கு, வழக்கு புலன் விசாரணை செய்ய புலன்விசாரணை அதிகாரிக்கு உரிய அதிகார அனுமதி வழங்குவதற்காகவும் அனுப்பி வைக்கப்பட்டது. மற்றொரு நகல் வழக்கின் கோப்பிலும் வைக்கப்பட்டது.

[signature] 14/09/2020
(P. ARULJOTHI)
Inspr. of Police,
V&AC, Trichy.